சட்ட முன்வடிவு எண் 38/1972) திருப்பி அனுப்பப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி; "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் (ஒழிப்பு--ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1972) திருப்பி அனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972).

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு@ (சட்ட பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

*** திரு. கே. ராஜாராம்:** இது விவாதத்திற்குரிய விஷயமில்லை. இருந்தாலும் ஒரு சந்தேகம். 50 பஸ்களுக்கு மேல் உள்ளதை அரசாங்கம் ஏற்கும்போது, அதில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கியை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நஷ்ட ஈட்டிலிருந்து பிடித்துக்கொள்ள வேண்டும். எந்த தேதியில் பஸ்களை ஏற்கிறோமோ, அந்த தேதிவரைக்கான பாக்கிகளைப் பிடித்துக்கொள்ள வேண்டும். இதற்கு சட்டம் தேவைதானு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரை, அவர்களுக்கு இருக்கும் பாக்கியைப் பிடித்துக் கொள்ள வழிவகை

@ 413-414-ஆம் பக்கங்களில் இணைப்பு IX- ஆக அச்சிடப்பட்டுள்ளது.

செய்கிறது. ஆனுல் கமிட்மெண்ட் என்று சொல்லக் கூடியதை அவர்களுக்கு எப்படிக் கொடுப்பது? உதாரணமாக 'கிராஜுயிடி' என்று அவர்களுடைய மொத்த சர்விசைப்பார்த்து, அதுவரையில் அவர்கள் கணக்கில் வேலைசெய்த மாதத்திற்கு உண்டான தொகையை அவர்கள் கணக்கில் சேர்க்க வழி வகை செய்கிறது, இந்தச் சட்டம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1972-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவுவாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, " சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 36/1972) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடைமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.